RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING


www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 15 | ஜனவரி.21 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# ஜன.24 வரை சட்டப்பேரவை கூட்டத்தொடர்: அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் முடிவு



சென்னை: ஜன.21-

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஜனவரி 24ம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரை ஜனவரி 24ம் தேதி வரை நடத்த அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதனை தொடர்ந்து சட்டப்பேரவை கூட்டத்தொடருக்கான நிகழ்ச்சி நிரல் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளது.

அதன்படி, இன்று (ஜனவரி 21) அன்று சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்படும். இதில் தொழிலதிபர் அருணாச்சலம் வெள்ளையன், கவிஞர் ஈரோடு தமிழன்பன், திரைப்பட தயாரிப்பாளர் ஏவிஎம். சரவணன், மக்களவை முன்னாள் தலைவர் சிவராஜ் பாட்டில், சட்டப்பேரவை உறுப்பினர் கே.பொன்னுசாமி ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

ஜனவரி 22ம் தேதி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் முன்மொழியப் பெற்று விவாதம் தொடங்கும்.

ஜனவரி 23ம் தேதி 2022 2023 ஆம் ஆண்டுக்குரிய மிகை செலவுக்கான மானிய கோரிக்கை பேரவைக்கு அளிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடரும். ஜனவரி 24ம் தேதி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளிக்கப்படும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 36 கலை, அறிவியல் கல்லூரிகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது: 10லட்சம் மாணவர்களுக்கு லேப் டாப்



சென்னை, ஜன.21-

அரசு பள்ளி மாணவர்களுக்கு இளநிலை தொழில் கல்விப் படிப்புகளில் 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு அளிக்கும் திட்டத்தின் கீழ் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் கல்வி, விடுதி மற்றும் போக்குவரத்து ஆகியவற்றுக்கான கட்டணத்தையும் அரசே ஏற்றுக் கொள்கிறேது. இந்த முன்னோடி திட்டத்துக்கு கடந்த 5 ஆண்டுகளில் 36,419 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.703 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் கீழ் இந்திய அளவில் உள்ள முதல் 100 உயர் கல்வி நிறுவனங்களின் 17 நிறுவனங்கள் அமையப்பெற்று தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தை பெற்று வருகிறது.

பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.909 மதிப்பீட்டில் அரசு பொறியியல் கலை அறிவியல் மற்றும் பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், பணிமனைகள், தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்டவை அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இந்த அரசின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாக கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 36 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் புதிதாக தொடங்கப்பட்டுள்ளன.

வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்ப யுகத்தில் நமது மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு உட்பட தொழில் நுட்ப துறையில் அரிய சாதனைகள் படைத்திட தமிழகத்தில் உள்ள கலை அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உட்பட பல்வேறு கல்லூரிகளில் பயின்று வரும் 10 லட்சம் மாணவர்களுக்கு இந்த ஆண்டில் ரூ.2172 கோடி மதிப்பீட்டில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதை தொடர்ந்து ஊக்குவிப்பதன் மூலம் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் தமிழகம் முன்னணி மாநிலமாக விளங்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## "மோதல் அரசியலுக்கு விதை தூவும் ஆர்.என்.ரவியை ஆளுநர் பொறுப்பில் இருந்து விலக்குக" மு.வீரபாண்டியன்





சென்னை, ஜன.21-

"அமைதியும், நல்லிணக்க சூழலும் நிலவி வரும் தமிழ்நாட்டில் மோதல் அரசியலுக்கு விதை தூவும் ஆர்.என். ரவியை ஆளுநர் பொறுப்பில் இருந்து விலக்க வேண்டும் என குடியரசுத் தலைவரை கேட்டுக் கொள்கிறேன்" என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆர்எஸ்எஸ் வழிநடத்தும் பாஜக ஒன்றியத்தில் ஆட்சி அதிகாரம் பெற்ற, ஆரம்ப நாளில் இருந்து மாற்று அரசியல் கருத்துடைய மாநில அரசுக்கு எதிரான தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகிறது. குறிப்பாக ஆளுநர் மாளிகை வழியாக மாநில அரசுகளின் ஜனநாயகபூர்வ செயல்பாட்டிற்கு பல்வேறு இடையூறுகளை செய்து, மக்கள் நலனுக்கும், மாநில முன்னேற்றத்துக்கும் தடைகளை ஏற்படுத்தி வருகிறது. இதற்காகவே குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் பயன் படுத்தப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் ஆளுநர் பொறுப்பில் இருந்து வரும் ஆர்.என். ரவி, ஆரம்ப நாளில் இருந்தே அரசியலமைப்பு அதிகாரத்தை அத்துமீறி, தன்னிச்சையாக மாநில அரசுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார். ஆர்.என்.ரவி, அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட ஆளுநர் பொறுப்புக்கு எள்ளளவும் தகுதியற்றவர் என்பதை ஆதாரப்பூர்வமான சான்றுகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து குடியரசுத் தலைவரிடம் புகார் அளித்தும், அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் ஊக்கம் பெற்ற ஆர்.என்.ரவி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒரு மனதாக நிறைவேற்றிய சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல், கிடப்பில் போட்டு, இழுத்தடித்து, இறுதியில் அவைகள் செத்துப் போனதாக அவமதித்து வந்தார். தமிழ்நாடு அரசு முன்னெடுத்த சட்டப் போராட்டத்தின் மூலம் உச்ச நீதிமன்றம் ஆளுநர் அத்துமீறலை கடுமையாக விமர்சித்து, மக்கள் பிரதி நிதிகள் ஆட்சி முறையில் சட்டமன்றப் பேரவையின் அதிகாரத்துக்கும், மாநில அரசுக்கும் மேலான அதிகாரம் பெற்றவர் அல்ல ஆளுநர் என்பதை உறுதியாக தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த நிலையில் காலையில் கூடிய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உரையாற்றி, கூட்டத் தொடரை தொடங்கி வைக்க வேண்டிய ஆளுநர் ஆர்.என்.ரவி, சட்டமன்றப் பேரவை வழிவழியாக பல பத்தாண்டுகளாக பின்பற்றி வரும் நல்மரபை உடைத்து சிதைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். பேரவைத் தலைவர், அவையின் மரபை எடுத்துக் கூறி, அவை மதிக்கப்பட வேண்டும் என விடுத்த வேண்டுகோளை நிராகரித்து, வழக்கம் போல வேகமாக வெளியேறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஆளுநர் மாளிகை, எதிர் கட்சியினரும் சொல்ல முடியாத, அடிப்படையும், ஆதாரமும் இல்லாத அரசியல் அவதூறுகளை அறிக்கையாக தொகுத்து வெளியிட்டிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு முழுமையாக நிராகரிக்கிறது. வன்மம் கொண்ட அறிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது.

சிறு, குறு, நடுத்தரத் தொழில்களின் நலனை பேணுவதில் நாட்டிலுள்ள முதல் 5 மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு பின் தங்கியிருப்பதாக ஆளுநர் கூறுவது குருட்டுத்தனமானது.

இருபதாண்டுகளாக செயல்பட்டு வந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை நீக்கியதன் மூலம் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் உள்ள சுமார் 2 கோடி தொழிலாளர்களின் சட்டபூர்வ வேலை பெறும் உரிமையை பறித்து விட்டு, மதவாத சக்திகளுக்கு உதவும் விபி ஜி ராம்ஜி திட்டத்தை அறிவித்துள்ள ஒன்றிய அரசை காப்பாற்றும் முயற்சியில் தரம் தாழ்ந்த, மலிவான அரசியலில் ஈடுபடும் ஆர்.என்.ரவி, ஒரு வினாடியும் ஆளுநர் மாளிகையில் இருக்க தகுதியற்றவர்.

அவரது வன்ம அரசியலை களத்தில் தமிழக மக்கள் முற்றாக முறியடிப்பார்கள். அமைதியும், நல்லிணக்க சூழலும் நிலவி வரும் தமிழ்நாட்டில் மோதல் அரசியலுக்கு விதை தூவும் ஆர்.என்.ரவியை ஆளுநர் பொறுப்பில் இருந்து விலக்க வேண்டும் என குடியரசுத் தலைவரை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்வதுடன், தமிழ்நாட்டின் தனித்துவம் வாய்ந்த பண்புகளையும், மரபுகளையும் பாதுகாக்க, ஜனநாயக நெறிகளையும், சட்டத்தின் ஆட்சி முறையினையும் பாதுகாக்க ஜனநாயக சக்திகள் ஒருங்கிணைந்து செயல்பட முன் வர வேண்டும் என கேட்டுக் கொள்கிறது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





## மானாமதுரையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்: நெடுஞ்சாலைத் துறையினர் பங்கேற்பு

மானாமதுரை, ஜன. 21

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வழிவிடு முருகன் கோவில் அருகே நெடுஞ்சாலைத் துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முக்கிய நிகழ்வுகள்:

சிவகங்கை கோட்டப் பொறியாளர் சந்திரன் வழிகாட்டுதலின் படி இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் சாலைப் பாதுகாப்பு அலகு கோட்டப் பொறியாளர் ஆர். வரலட்சுமி தலைமை தாங்கி, பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் சாலை விதிகளைப் பின்பற்றுவதன் அவசியம் குறித்து விளக்கினார்.

பங்கேற்பாளர்கள்:

இந்த முகாமில் பின்வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்:

* முத்தீஸ்வரன் உட்கோட்டப் பொறியாளர், மானாமதுரை நெடுஞ் சாலைத் துறை.

* இந்திரா பிரியதர்ஷினி இளநிலை பொறியாளர்.

* சாலை ஆய்வாளர்கள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை பணியாளர்கள்.

விழிப்புணர்வு நடவடிக்கைகள்:

முகாமின் போது, தலைக்கவசம் அணிவதன் முக்கியத்துவம், மிதமான வேகம், மற்றும் சாலை சமிக்ஞைகளை (Signals) மதித்தல் குறித்த துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. விபத்துகளைத் தவிர்க்க ஓட்டுநர்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து செயல்முறை விளக்கங்களும் அளிக்கப்பட்டது..

## தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில் புதிய டைடல் பூங்காக்கள்



சென்னை, ஜன.21-

தமிழ்நாட்டில் மேலும் 14 மாவட்டங்களில் டைடல் பூங்காக்கள் மற்றும் மினி டைடல் பூங்காக்கள் வர உள்ளன என்று ஆளுநர் தெரிவித்தார். சட்டப் பேரவையில் ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று உரையாற்றியபோது கூறியதாவது: தொழில் துறையில் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் ரூ.12.16 லட்சம் கோடிக்கும் மேலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, மாநிலம் முழுவதும் தொழில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இதுவரையில் 1176 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை சுமார் 36 லட்சம். 2025ம் ஆண்டில் மட்டும் 14.65 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் மின்னணுவியல் பொருட்கள் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தேசிய அளவில் மின்னணுவியல் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 41.2 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது. முத்தமிழறிஞர் கலைஞரின் முயற்சியால் கடந்த 2000ம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்ட டைடல் பூங்கா, தகவல் தொழில் நுட்பத் துறையில் தமிழ்நாட்டுக்கான உயரிய இடத்தை உறுதி செய்தது.

அதே வழியில் இந்த அரசும் திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் ஒரு டைடல் பூங்காவையும், தஞ்சாவூர், சேலம், விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர், திருப்பூர் ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்களையும் நிறுவியுள்ளது. மேலும் மதுரை, திருச்சி, ஓசூர், காரைக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு, நாமக்கல், திருவண்ணாமலை கரூர், உதக மண்டலம், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதிய டைடல் மற்றும் மினி டைடல் பூங்காக்கள் நிறுவப்பட உள்ளன.

இதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் இந்த தொழில் பரவி நம் மாநிலம் சமச்சீரான வளர்ச்சியை எட்டும் நிலை உருவாகியுள்ளது. மேலும், சென்னையில் ரூ.83 கோடி மதிப்பில் நிதி நுட்ப மையம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் 18 புதிய துறைசார் கொள்கைகளை இந்த அரசு வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் சுமார் 40 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவை மாநிலத்தின் மொத்த தொழில் சாலை உற்பத்தியில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி முறை என்னும் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் மூலம் குறு, சிறு நடுத்தரத் தொழில்களை ஊக்குவிக்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கையும் வெளியிடப்பட்டுள்ளது. உலக புத்தொழில் மாநாடு, தொழில் பயிற் முகாம்கள் என பல முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (TCMS-மஞ்சள் குடோன்) வளாகத்தில், மாவட்ட தேர்தல் இருப்பு அறையில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை (EVMs/VVPATS) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி, மாதாந்திர ஆய்வு மேற்கொண்டார். உடன் தேர்தல் வட்டாட்சியர் திருமலை மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# வைகை அணையில் கலை பண்பாட்டு துறை, சுற்றுலா துறை சார்பாக பொங்கல் கலை நிகழ்ச்சி விழா

பெரியகுளம், ஜன.21-

தேனி மாவட்டம் வைகை அணையில் சிறுவர் பூங்காவில் கலை பண்பாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை சார்பாக பொங்கல் கலை நிகழ்ச்சி விழா நடைபெற்றது இந்த கலை நிகழ்ச்சியில் தப்பாட்டம் தேவர் ஆட்டம் கரகாட்டம் நையாண்டி மேளம்...



மாடு ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளை தேனி மாவட்டத்தில் உள்ள ஊர்களில் இருந்து வைகை அணைக்கு வந்த சுற்றுலா பயணிகள் இந்த இந்த நிகழ்ச்சியினை கண்டுகளித்தனர் இந்நிகழ்வில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் பெரியவர்கள் சிறுவர் ... சிறுமியர்கள் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கண்டு ரசித்து மகிழ்ந்தனர்..

இந்த நிகழ்ச்சியை நீர்வள துறை உதவி செயற்பொறியாளர் அலுவலக அதிகாரிகள் தேனி கலை பண்பாட்டு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அலுவலக ஊழியர்கள் சர்வர் மன்ற திட்ட அலுவலர் சுகுமார் ஓவியர் ஆசிரியர் ஜோசப் சுற்றுலாத்துறை அலுவலர் பாஸ்கர் மற்றும் அரசு ஊழியர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் கலை பண்பாட்டு துறை அலுவலர் தேனி தனுஷ்கோடி இந்த விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# தூத்துக்குடி தலித் இளைஞர் படுகொலையை கண்டித்து பெரியகுளத்தில் வி. சி.க வினர் கண்டன ஆர்ப்பாட்டம்

பெரியகுளம், ஜன.21-

தேனி மாவட்டம் பெரியகுளம் வட கரை பழைய பேருந்து நிலைய வளாகப்பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலை அருகே தேனி மாவட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, பெஞ்சமின் நகர் பகுதியைச் சார்ந்த தலித் இளைஞர் எழுமலையை வீடு புகுந்து வெட்டி படுகொலை செய்ததை கண்டித்தும், சாதி வெறிபிடித்த கயவர்களைகுண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வலியுறுத்தியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



பெரியகுளம் தொகுதி மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சுசி.தமிழ் பாண்டியன் தலைமையில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் தேனி மண்டல துணை செயலாளர் அரிமா ஜெ.ரபீக், ஆண்டிபட்டி பெரியகுளம் தொகுதி மண்டல துணைச் செயலாளர் ப.நாகரத்தினம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெரியகுளம் நகரச் செயலாளர் ஜோதி முருகன் வரவேற்புரை யாற்றினார்.

வி.சி.க முதன்மை செயலாளர் ஏ.சி.பாவரசு ,தலைமை செய்தி தொடர்பாளர் கார்வேந்தன், இரா.தமிழ் வாணன் முன்னாள் மண்டல செயலாளர் இரா. தமிழ்வாணன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கண்டன ஆர்ப்பாட்ட ஒருங்கிணைப்பாளர்கள் : மாநில மண்டல, மாவட்ட தொகுதி, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி மற்றும் முகாம் பொறுப்பாளர்கள் கண்டன ஆர்ப்பாட்ட ஒருங்கிணைப்பு செய்திருந்தனர இளஞ்சிறுத்தை எழுச்சிப் பாசறை மாவட்ட அமைப்பாளர் அ.மது நன்றியுரை யாற்றினார்.



■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி தாலுகா மழையூர் இந்து சமய அறநிலைத்துறை புதுக்கோட்டை தேவஸ்தானம் ஸ்ரீ அகத்தீஸ்வரர் உடனுறை ஸ்ரீ பெரிய நாயகி அம்பாள் ஆலயத்தில் அருகிலுள்ள தலிய குளம் சுற்றுச்சுவர் இடிந்த நிலையில் நான்கு புறமும் விரைந்து சீரமைக்க பக்தர்கள் பொதுமக்கள் சமூக ஆர்வலர் எம் சி மனோகர் கோரிக்கை

# பழனியில் தமிழக வெற்றி கழகம் சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

திண்டுக்கல், ஜன.21-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக வெற்றி கழகம் கட்சி அலுவலகத்தில் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் பாலன் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றன.

தொடர்ந்து குளிர்காலம் தொடங்கி நிலவி வருவதால் குளிரில் தத்தளிக்கும் ஏழை எளிய பொதுமக்களுக்கு சொட்டர், பனியன், காது அடைப்பான், போர்வை, மப்ளர் துண்டு உள்ளிட்டவைகளை 50க்கும் மேற்பட்டோருக்கு வழங்கி சிறப்பித்தனர்.



தொடர்ந்து குளிர்சாதன பொருட்களை பெற்றுக் கொண்ட ஏழை எளிய மக்கள் கட்சி நிர்வாகிகள் மற்றும் பிறந்தநாள் காணும் பாலன் நீண்ட காலம் நலமுடன் வாழ வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்தினார். தொடர்ந்து இந்நிகழ்வில் தமிழக வெற்றி கழக மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு ஏழை எளிய பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றன. மேலும் பிறந்தநாள் நிகழ்வை முன்னிட்டு கட்சி நிர்வாக இணைந்து கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர்.



■ மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், சாத்தமங்கலத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் கல்லூரி மாணவர்களுக்கான சமூகநீதி விடுதியில் அடிப்படை வசதிகள் குறித்து நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த விடுதிகளில் உள்ள நூலகம், சமையலறை,உணவருந்தும் அறை, பொருள் இருப்பு அறை ஆகியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.மேலும், விடுதியில் உள்ள மாணவர்களிடம் அவர்களின் தேவைகள், விடுதியில் உள்ள வசதிகள், வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவை குறித்தும், உரிய நேரத்தில் உணவு வழங்கப்படுகிறதா என்பது குறித்து கேட்டறிந்தார்.



■ மதுரை பெரியார் பேருந்து நிலையம் கட்டபொம்மன் சிலை அருகில் 37 வது சாலை பாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு மதுரை மாநகர போக்குவரத்து துணை ஆணையர் வனிதா தலைமையில் சாலை விதிகளை பின்பற்றி வரக்கூடிய வாகன ஓட்டிகளுக்கும் பொதுமக்களையும் ஊக்குவிக்கும் வகையில், எழுதுகோல்கள், இனிப்புகள் ,சிறப்பு பரிசுகள் வழங்கி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் இருசக்கர வாகன ஓட்டிகள் ஆட்டோ ஓட்டுநர்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை மூலம் செயல்பட்டு வரும் மதுரை மாநகராட்சி சொக்கிகுளம் உழவர் சந்தையில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் சார்பில் நடத்தப்படும் கடைகள், காய்கறிருபழங்கள் குளிர் பதனக் கிடங்கு ஆகியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார், இ.ஆ.ப.,ஆய்வு செய்து பார்வையிட்டார்.மேலும், சந்தைக்கு வரும் பொதுமக்களிடம் விலை நிலவரம் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான தேவைகள் குறித்து கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளின் அடிப்படையில் விவசாயிகளுக்கு குழுக்கள் முறையில் தினசரி கடைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறதா என்பதையும், அரசுப் பேருந்துகளில் விவசாயிகள் தங்களால் விளைவிக்கப்பட்ட பொருட்களை இலவசமாக கொண்டு வருகிறார்களா என்பதையும் கேட்டறிந்தார்.




# மதுரையில் மடிசியாவின் “மேட் இன் மதுரை” கண்காட்சி

மதுரை, ஜன.21-

மதுரையில் மடிசியா, தமிழ்நாடு தொழில் வணிகத்துறை,குறு,சிறு நடுத்தர தொழில் வசதியாக்க நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் ஆகியோர் இணைந்து மதுரையில் ஏழாவது முறையாக மாவட்ட தொழில் வளத்தை விளம்பரம் செய்து அரசாங்கத்துக்கு நம்பிக்கை ஊட்டுவதன் மூலம் பல பெரிய தொழிற்சாலைகளை மதுரையில் நிறுவுவதற்கு வழிவகை செய்தல் மற்றும் படித்து முடித்த இளைய சமுதாயத்திற்கு புதிய தொழில் தொடங்குவதற்கும், அரசாங்கம் மற்றும் வங்கிகள் போன்றவற்றில் ஏற்படுகின்ற சூழலில் சுய தொழிலில் ஈடுபட வழிவகை செய்தல் போன்ற வற்றிற்கும், ஏழாவது முறையாக “மேட் இன் மதுரை” கண்காட்சி ஜன 23 முதல் ஜன 25 வரை நடைபெற இருக்கிறது. இந்த கண்காட்சியில் 125 குளிரூட்டப்பட்ட அரங்குகள்,மதுரை மாவட்டத்தில் தயாரிக்கப்படுகின்ற டெக்ஸ்டைல்,பிளாஸ்டிக் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் புதுமையான சாதனங்கள் இடம் பெறும் வகையில் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.மடிசியா தலைவர் செந்தில்குமார் தலைமையில், மதுரை மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் கணேசன் வாழ்த்துரையுடன்,

மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் கண்காட்சியை துவக்கி வைக்கிறார். கண்காட்சித் தலைவர் சியாம் நாராயன் துணைத்தலைவர் விஜிஸ் தலைமையில் 20க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

# தாராபுரத்தில் உழவர் உழைப்பாளர் கட்சி பொங்கல் விழா - தீர்மானங்கள் நிறைவேற்றம்

திருப்பூர், ஜன.21-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அழகுநாச்சியம்மன் திருமண மண்டபத்தில் உழவர் உழைப்பாளர் கட்சி மற்றும் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் பொங்கல் விழா மற்றும் உழவர் தின கொடியேற்று விழா நடைபெற்றது.

உழவர் உழைப்பாளர் கட்சி மற்றும் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாவிற்குசெல்லமுத்து தலைமை வகித்தார்

பாரதிய ஜனதா கட்சி மாநில விவசாய அணி தலைவர் நாகராஜ் ,தாராபுரம் பாரதிய ஜனதா கட்சி. வழக்கறிஞர் எஸ்.கே. கார்வேந்தன். முன்னிலை வகித்தனர்




இந்த விழாவில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அதில் கறிக்கோழி பண்ணை உரிமையாளருக்கு கிலோ ஒன்றிற்கு ஆறு ரூபாய் தரும் கோழி பண்ணை நிறுவனங்களுக்கு 20 ரூபாய் கேட்டு கோழி உற்பத்தி நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்ட வழக்கறிஞர் ஈசனை கைது செய்ததை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினார்.

அதன் பிறகு .உற்பத்தி நிறுவனங்கள் உரத்துடன் இணை உரங்களை கட்டாயப்படுத்துவதை தடுத்து, விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் மட்டும் கிடைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சின்ன வெங்காயம் அதிகமாக உற்பத்தியாகும் மாவட்டங்களில் விவசாயிகள் நஷ்டமடையாமல் இருக்க, நிரந்தர வெளிநாட்டு ஏற்றுமதி அனுமதி வழங்க வேண்டும்.

அமராவதி பாசன பகுதிகளில் விளையும் மக்காச்சோளத்திற்கு குவிண்டால் ரூ.4000 விலை நிர்ணயம் செய்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும்.

காட்டுப்பன்றிகள் பயிர்களை சேதப்படுத்துவதை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகமும் வனத்துறையும் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பாதுகாப்பான சேமிப்பகங்கள் அமைத்து, இடைத்தரகர்கள் இன்றி நேர்மையான கொள்முதல் நடைபெற வேண்டும்.

அமராவதி அணையிலிருந்து வீணாகும் உபரி நீரை உப்பாறு அணைக்கு கொண்டு செல்ல சிறப்பு திட்டம் அமல்படுத்த வேண்டும்.

தக்காளி, மிளகாய் பயிர்களை தாக்கும் வைரஸ் நோய் குறித்து தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்மை பல்கலைக்கழகம் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காங்கேயம் வனச்சரக அலுவலகத்தை தாராபுரத்தில் அமைக்க இடம் ஒதுக்க வேண்டும்

தட்கல் விரைவு மின் இணைப்புக்கு கட்டணம் செலுத்திய விவசாயிகளுக்கு வரிசைப்படி மின் இணைப்பு வழங்க வேண்டும்.

இந்த தீர்மானங்கள் அனைத்தும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.



அய்யங்கோட்டையில் பழமையான தர்ம சொத்து சர்ச்சை - புகார்

# நீதிமன்ற தீர்ப்பை மீறி சொத்து அபகரிப்பு முயற்சி: மாவட்ட ஆட்சியரிடம் மனு

மதுரை, ஜன.21-

மதுரை மாவட்டம், அய்யங்கோட்டை கிராமத்தில் உள்ள பழமையான சொத்து ஒன்றைச் சுற்றி சட்டவிரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மாவட்ட ஆட்சியரிடம் லாவண்யா என்பவரால் புகார் மனுஅளிக்கப்பட்டுள்ளது.

மனுவில் அய்யங்கோட்டை கிராமம் சர்வே எண் 334/7ல் அமைந்துள்ள குறித்த சொத்து, கடந்த 04.05.1931 அன்று ஆவண எண் 531/1931 மூலம் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில், செல்லசாமி (எ) சின்னசாமி அவர்களால் தர்மகர்த்தாக்களின் மேலாண்மையில் ஒரு டிரஸ்ட்டாக உருவாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பல ஆண்டுகளாக தர்ம காரியங்கள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்று வந்ததாக கூறப்படுகிறது.

அந்த ஆவணத்தின் படி, செல்லசாமி (எ) சின்னசாமி அவர்களின் மறைவிற்குப் பிறகு, அவரது வாரிசுகளாக சந்தனகோபால் மற்றும் அவரின் வாரிசுகள் தர்மகர்த்தர்களாக செயல்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், குறித்த சொத்தில் சமாதி அமைத்து வழிபாடு செய்து வந்ததாகவும், அந்த நடைமுறைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்ததாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், குடும்ப பங்காளியான ஜெயகுமார் என்பவர், தர்மகர்த்தர்களின் உரிமையை எதிர்த்து நடந்து கொண்டதாகவும், இதன் காரணமாக மதுரை சார்பு நீதிமன்றத்தில் O.S. No.320 of 1968 என்ற வழக்கு தொடரப்பட்டு, அது நீண்ட காலமாக நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது, நீதிமன்றத்தில் தீர்வு காணப்பட்ட சொத்துக்கு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில், அந்த சொத்தில் சட்டவிரோதமாக தலையீடு செய்ய முயற்சி நடைபெறுவதாக புகார் எழுந்துள்ளது. சொத்து தொடர்பான வழக்கு O.S.No.151 of 2021 என மதுரை நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு முடிவுறாத நிலையில், சிலர் தர்மகர்த்தாக்களின் அனுமதி இன்றி சொத்தில் மாற்றங்கள் செய்ய முயற்சிப்பதாக கூறப்படுகிறது.எதிராக சிலர் சட்டவிரோதமாக உரிமை கோரும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும், இதனால் சட்ட ஒழுங்கு பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளதாகவும் கூறி, புகார் அளிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய விசாரணை மேற்கொண்டு, நீதிமன்ற தீர்ப்பும் பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களும் அடிப்படையாக கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழ்நாடு முதலமைச்சருக்கு மதுரை மாவட்ட பொதுமக்கள் நெஞ்சார்ந்த நன்றி தெரிவித்தனர்





தமிழ்ச்சமுதாயத்தின் முக்கிய பண்பாட்டுத் திருவிழாவான பொங்கல் விழா கொண்டாடப்படும் வேளையில் தமிழ்நாடு முழுவதிலும் காளையை இளைஞர்கள் அடக்கும் வீரத்தைப் புலப்படுத்தும் ஏறுதழுவுதல் விழா நடைபெறும். இந்த மாடுபிடி விழாவை, ஒன்றிய அரசு விலங்குகள் வதைச் சட்டத்தின் துணைகொண்டு தடைவிதிக்க முனைந்தபோது, தமிழனின் பண்பாட்டு உரிமை எனத் தன்னெழுச்சியாகச் சீறி எழுந்த தமிழ்நாட்டு இளைஞர்களால், இந்திய உச்சநீதிமன்றமே தடையை விலக்கி அனுமதி வழங்கிய வரலாறு இந்த விழாவின் வெற்றி முத்திரையாகப் புகழ் படைத்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றப் பின்னர், அலங்காநல்லூரில் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்து, மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் கீழக்கரையில் பிரம்மாண்ட ஏறுதழுவுதல் அரங்கம் அமைத்திட 62 கோடியே 78 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை மூலம் வாடிவாசல், ஒரே நேரத்தில் 5,000 பார்வையாளர்கள் அமர்ந்து காணும் வசதிகளுடன் மூன்றடுக்குப் பார்வையாளர் மாடம், ஏறுதழுவுதல் நடைபெறும் இடம், மிக முக்கிய விருந்தினர்கள் அமரும் இடம், ஏறுதழுவுதலில் பங்குபெறும் காளைகளின் எழுச்சி வடிவங்களைப் புலப்படுத்தும் அருங்காட்சியகம், ஒலிஒளி காட்சிக்கூடம், கால்நடை மருந்தகம், நூலகம், மாடுபிடி வீரர்களுக்கான தங்கும் அறைகள், புல்வெளிகளுடன்கூடிய தோட்டம் என அனைத்து வசதிகளுடன் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுர அடி பரப்பளவில்

மிகப் பிரம்மாண்டமான கட்டடமாக ஏறுதழுவுதல் அரங்கம் கட்டி முடிக்கப்பட்டு, தமிழர்தம் மகத்தான பண்பாட்டுச் சின்னமான அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் அரங்கத்தினை 24.1.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலங்காநல்லூர் கீழக்கரை கிராமத்திற்கு நேரில் சென்று திறந்து வைத்தார். இந்த அரங்கம் ஆண்டு முழுவதும் சுற்றுலாவிற்குப் பயன்படுவதுடன், ஜல்லிகட்டு நடைபெறாத காலங்களில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலங்காநல்லூர் ஜல்லிகட்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து இரண்டு அறிவிப்புகளை அறிவித்தார்.

1. பாரம்பரியம் மிக்க ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்குபெற்று, அதிக காளைகளை அடக்கி, சிறந்து விளங்கும் வீரர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில், கால்நடை பராமரிப்பு துறையில், உரிய அரசு பணி இடங்களுக்கு, பணி அமர்த்தம் செய்ய வழிவகை செய்யப்படும்.

2. உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் பகுதியில், ஜல்லிக்கட்டு காளைகளுக்கான, சிறப்பு உயர்தர சிகிச்சை மற்றும் பயிற்சி மையம், 2 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பயன்பெற்ற பயனாளி சண்முக குமார் தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் சண்முக குமார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழாவிற்கு வருகை தந்து பார்வையிட்டார். வருகை தந்த்து மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த தமிழர்கள் ஜல்லிக்கட்டு சொந்தங்களுக்கும் ஒரு நல்ல செய்தியை அறிவித்தார். இவ்வளவு வருடங்கள் நாங்கள் போராடிய போராட்டத்திற்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்துள்ளது. ஜல்லிக்கட்டு வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அரசு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என அறிவித்தார். இந்த ஆண்டு 2026ல் நல்ல செய்தியை அறிவித்துள்ளார்கள் சிறந்த காளைகள் மற்றும் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு தங்க மோதிரம் மற்றும் பரிசுகள் வழங்கினார்கள். மேலும் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் ஆகிய மூன்று ஊர்களிலும் நடைபெற்ற ஜல்லிக்கட்டு விழாவில் சிறந்த மாடுபிடி வீரர்கள் மற்றும் சிறந்த காளைகளுக்கு டிராக்டர், கார், நாட்டுப்பசு, மோட்டார் சைக்கிள் ணி மோட்டார் சைக்கிள் போன்றவற்றை வழங்கினார்கள். மாடுபிடி வீரர்களுக்கும், பொதுமக்களுக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படாத வகையில் பேரிகார்டு அமைத்து பாதுகாப்பாக ஜல்லிக்கட்டு நடைபெறுவதற்கு பல்வேறு முன்னேற்பாடு பணிகள் செய்துள்ளார்கள். எங்களுடைய நீண்ட நாள் ஏக்கங்களை தனது அறிவிப்பின் மூலம் நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவித்தார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.**



# இளையான்குடி மேற்கு ஒன்றியக்கழகம் சார்பில் சமத்துவப் பொங்கல், விளையாட்டு போட்டிகள்

ஒசெ. வெங்கட்ராமன் தலைமை, எம்எல்ஏ. தமிழரசி, மலைமேகு, அய்யாச்சாமி, இராமமூர்த்தி, இராஜபாண்டி பங்கேற்பு

இளையான்குடி, ஜன. 21-

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் சமத்துவப் பொங்கல் விழா விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது...

இளையான்குடி மேற்கு ஒன்றியக்கழக செயலாளர் கா. வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் மலை மேகு, தலைமைக்கழகப் பேச்சாளர், மாவட்ட பிரதிநிதி நெட்டூர் அய்யாச்சாமி, பிரதிநிதி இராமமூர்த்தி, எம். ஆர். டி. பாலச்சந்தர் மு. சௌந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் த. சண்முகம் வரவேற்புரையாற்றிட நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மேனாள் அமைச்சர்

ஆ. தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு பரிசுப் பொருட்களை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார்...

இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் முகமது, தலைமைப் பொதுக்குழு த. உதயகுமார், ஒன்றியக்கழக நிர்வாகிகளான சுப. சேதுபதி துரை, இராஜபாண்டி, துணைச்செயலாளர்களான இருளாயி இராஜபாண்டி, ராஜேஷ்வரி பாரத்தசாரதி, ஒன்றிய பொருளாளர் குழந்தைப்பாண்டியன், கிளைக்கழக செயலாளர்கள் ஆரோக்கி யபாலன், இளங்கோவன், சந்தானம், சுந்தரராஜன், மதியழகன், அன்னதாஸ், ராமையா, கண்ணையா, கிருஷ்ணன், குருசாமி, ராமையா, கோவிந்தராஜ், முனியன், மாரிக்கண்ணு, செல்வம், ராமமூர்த்தி, சந்திரமோகன், கதிர்வேல், திருமுருகன், திருப்பதி, பிச்சை மணி, ஏழுமலை, தண்ணீர் மலை, காட்டுராஜன், பாபு, முருகேசன், முத்துராமலிங்கம், அழகு, கணேசன், ஹென்றி ஜோஸப், முத்து, ரவிக்குமார், விஷ்வநாதன், சிங்கணன், இராஜேந்திரன் உள்ளிட்ட திமுக வினர் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சியின் இறுதியில் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் லெனின் நன்றி கூறினார்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை இளையான்குடி மேற்கு ஒன்றிய செயலாளர் கா. வெங்கட்ராமன் தலைமையில் சிறப்பாக செயதிருந்தனர்...

# கிருஷ்ணகிரி துணை போலீஸ் சூப்பிரண்டு பதவியேற்பு



கிருஷ்ணகிரி, ஜன.21-

கிருஷ்ணகிரி துணை போலீஸ் சூப் பிரண்டாக பணியாற்றி வந்த முரளி, திருப்பத்தூருக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அவருக்கு பதிலாக ராணிப்பேட்டை துணை போலீஸ் சூப்பிரண்டுராமச்சந்திரன் கிருஷ்ண கிரிதுணை போலீஸ் சூப்பிரண்டாக நியமிக்கப்பட்டார். அவர் நேற்று பத வியேற்றுக் கொண்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில் கிருஷ்ணகிரி உட்கோட்டத்தில் நிலுவையில் உள்ள வழக்கு களை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படும் என்றார். அவருக்கு இன்ஸ்பெக் டர்கள், சப் இன்ஸ் பெக்டர்கள், போலீசார் வாழ்த்து தெரிவித்தனர்.



## பொங்கல் விழாவை முன்னிட்டு திருவாடானை அருகே பழயணக்கோட்டையில் 18 வயதுக்குட்பட்டோருக்கான ஜூனியர் கபடி போட்டி நடைபெற்றது

திருவாடானை.ஜன.21-

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே பொங்கல் விழாவை முன்னிட்டு பழயனக்கோட்டை கிராமத்தில் உள்ள அய்யனார்கோயில் திடலில் கிராமத்தினர் சார்பில் 18 வயதுக்குட்பட்டோருக்கான ஜூனியர் கபடி போட்டி நடைபெற்றது. முன்னாள் யூனியன் தலைவர் குட்லக் ராஜேந்திரன் தலைமையில் முன்னாள் ஒன்றியக் கவுன்சிலர் சுந்தரேஸ்வரி பாண்டி முன்னிலையில் போட்டி நடைபெற்றது இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, புதுக்கோட்டை, தேனி,திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 50 க்கும் மேற்பட்ட அணிகள் கலந்து கொண்டன.இந்த கபடி போட்டியில் திருப்பாலைக்குடி கபடி அணி முதல் இடத்தையும், பழயனக்கோட்டை கபடி அணி இரண்டாம் இடத்தையும் பிடித்தது.

வெற்றி பெற்று முதல் ஆறு இடங்களைப் பிடித்த அணிகளுக்கு பரிசு தொகையும், வெற்றிக்கான சுழற்கோப்பையும் வழங்கப்பட்டது. இந்த கபடி போட்டியில் தொண்டி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இந்த நிகழ்வில் தொழிலதிபர் குட்லக் நாகநாதன் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு கபடி போட்டியினை ஆர்வமுடன் கண்டு களித்தனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை இளைஞர் நற்பணி மன்றம் மற்றும் PKT அம்மன் செவன்ஸ் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.



■ ஓசூர் வருகை புரிந்த திமுக 2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கழகத் துணைப் பொதுச்செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் அவர்கள் பொன்னாடை கொடுத்து வரவேற்றார்.




# மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் தேசிய சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு

மதுரை, ஜன.21-

மதுரை மீனாட்சி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் தேசிய சாலை பாதுகாப்பு வார விழிப்புணர்வு குறித்தான நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில்

மீனாட்சி மிஷன்மருத்துவமனையின் அவசர சிகிச்சைதுறைத் தலைவர் மற்றும் இயக்குநர் டாக்டர் நரேந்திர நாத் ஜெனா பேசுகையில் : சாலை விபத்துகள் இந்தியாவில் ஒரு முக்கிய பொது சுகாதாரப் பிரச்சினையாக இருக்கிறது.கடந்த ஆண்டு மதுரை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் நடந்த சாலை விபத்துகளில் 1525 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது வேதனைக் குறியதாகும்.சாலை என்பது பலி வாங்கும் இடமாக இல்லாமல் பாதுகாக்கும் இடமாக இருக்க வேண்டும் என்பதே நம் அனைவரது நோக்கமாகும்.அதை நம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுத்த வேண்டும். அதற்கு சாலை விதிகளை முறையாக அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். எங்கள் மீனாட்சி மருத்துவமனையில் அவசர விபத்துகளை கையாள்வதற்காக வலுவான அவசரக் சிகிச்சை பிரிவு பைக் ஆம்புலன்ஸ்கள், ஒருங்கிணைந்த ஆம்புலன்ஸ் வடிவமைப்பு உள்ளிட்ட சிகிச்சை மையம் இருப்பதால் அண்டை மாவட்டங்களில் இருந்தும் நோயாளிகள் எங்களை எளிதாக அணுகுகிறார்கள். சர்வதேச நெறிமுறைகளின் படி நோயாளி மருத்துவமனைக்கு வந்த 15 நிமிடங்களுக்குள் அதாவது கோல்டன் ஹவர்ஸில் சிகிச்சை வழங்குவதில் எங்கள் விபத்து காக்கும் நிபுணர் குழு மேம்பட்டு இருக்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். இந்த சந்திப்பின் போது மருத்துவமனை நிர்வாகி டாக்டர் கண்ணன்,அவசர சிகிச்சை இணை மருத்துவ நிபுணர்கள் டாக்டர் சுப்புலட்சுமி, டாக்டர் காவியா கண்ணன், டாக்டர் பிரபு ஆகியோர் உடனிருந்தனர்.

# சூளகிரி மற்றும் காமன் தொட்டி பகுதிகளில் நாளை மின்சார நிறுத்தம்

கிருஷ்ணகிரி, ஜன.21-

கிருஷ்ணகிரி மின்வாரிய செயற்பொறியாளர் பவுன்ராஜ் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் வினியோக கழகம் கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்டம், கிருஷ்ணகிரி கோட்டத்தில் 110/3311 கி.வோ. சூளகிரி துணை மின் நிலையம் மற்றும் 110/3311 கி.வோ காமன்தொட்டி துணை மின் நிலையங்களில் மாதாந்திர பராமரிப்பு பணி நடைபெறுவதால் மின்நிறுத்தம் செய்யப்படும் நாள் வருகின்ற 22.01.2026 (வியாழக்கிழமை) அன்று, சூளகிரி 110 கி.வோ. துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதால் இங்கிருந்து மின் வினியோகம் செய்யும் சூளகிரி நகர், உலகம், மாதரசனப்பள்ளி, ஏனுசோனை, சின்னார், சுண்டகிரி,சாமல்பள்ளம்,பீர்பள்ளி, எ.செட்டிப்பளி,புக்கசாகரம் ஆகிய பகுதிகளுக்கும் அதனை சுற்றியுள்ள கிராமங்களுக்கும் 22.01.2026 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை மின் நிறுத்தம் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வருகின்ற 22.01.2026 (வியாழக்கிழமை) அன்று 110/3311 கி.வோ காமன்தொட்டி துணை மின் நிலையத்தில்மாதாந்திர பராமரிப் புபணிகள மேற்கொள்வதால் இங்கிருந்து மின் வினியோகம் செய்யும் அட்டகுறுக்கி, காமன் தொட்டி, சீபுரிகொட்டாய், கோபசந்திரம், ஜோதி நகர், காவேரி நகர், மு. திண்ணூர்,பண்ணப்பள்ளி, ரவுத்தப்பள்ளி, பாரதிபுரம், யு.கொத்தூர், தும்மைப்பள்ளி, உஸ்தலப்பள்ளி, தாசனபுரம், தோரிப்பள்ளி, கல்லுகுறுக்கி, கொத்தகோட்டர், ஒட்டர்பாளையம், குக்கல பள்ளி, சுப்புகிரி, கான லட்டி, கோனே ரிப்பள்ளி, பிள்ளை கொத்துர், பாத்தக்கோட்டா, ராமபுரம், ஆலியாளம் ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களுக்கும் 22.01.2026 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை மின் நிறுத்தம் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.




## பல்லாவரத்தில் ஜசிஎம் தலைமை போதகர் ஜெயாதங்கராஜ் பிறந்தநாளை நேற்று ஜசிஎம் நிர்வாகிகள் சார்பில் சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

பல்லாவரம், ஜன.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பல்லாவரத்தில் ஜசிஎம் ஜெப வீடு தலைமை சார்பில் நடைபெற்ற ஜசிஎம் தலைமை போதகர் அப்போஸ்தலர் ஜெயா தங்கராஜ் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஜசிஎம் நிர்வாகிகள் மற்றும் உறவினர்கள் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர் அதனைத் தொடர்ந்து அறுசுவை உணவு சிக்கன் பிரியாணி வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் பாஸ்டர் ஜெயராஜ் பாஸ்டர் கிரேஸ் ஜெயராஜ் மற்றும் ஜசிஎம் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## மதுரை அண்ணா நகர் பகுதிக்கழகம் சீமான் நகரில் சமத்துவப் பொங்கல் விழா: மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் எம்எல்ஏ. கோ.தளபதி வழங்கல்

### திமுக சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் முகமது யாஸின் ஏற்பாடு

மதுரை, ஜன.21-

மதுரை அண்ணா நகர் பகுதிக் கழகம் கருப்பாயூரணி சீமான் நகரில் சமத்துவப் பொங்கல் விழாவினை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

பகுதி திமுக சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் முகமது யாஸின் ஏற்பாட்டில் மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான கோ. தளபதி அவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகளான தனிக்கொடி, முத்துக்கிருஷ்ணன், பாலுச்சாமி, ரமேஷ்குமார், ஆட்டோ ரவி, ராஜேந்திரன், செல்லப்பாண்டி, அல்லாபிச்சை, நிஜாம் பாய், ஷாஜகான், ரிஷ்வான், சகாபுதீன் , முகமது ஷேட், ராஜாமுகமது , குபேந்திரன் , மெட்ராஸ் பாண்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை அண்ணா நகர் பகுதகக்கழக திமுக சிறுபான்மைப் பிரிவு துணை அமைப்பாளர் முகமது யாஸின் மிகவும் சிறப்பாக செய்திருந்தார்.

## மானாமதுரை ரயில்வே காலனி துணை அஞ்சலகத்தை இடமாற்றம் செய்ய எதிர்ப்பு: பொதுமக்கள் கோரிக்கை




மானாமதுரை, ஜன.21-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ரயில்வே காலனியில் நீண்டகாலமாகச் செயல்பட்டு வரும் துணை அஞ்சலகத்தை (RS SO), மானாமதுரை தலைமை அஞ்சலகத்துடன் இணைக்கும் தற்காலிக உத்தரவுக்கு அப்பகுதி பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

முக்கிய பின்னணி:

மானாமதுரை ரயில்வே காலனி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தத் துணை அஞ்சலகத்தின் மூலம் SB, RD, SSA, RLP, PLI உள்ளிட்ட பல்வேறு சேவைகளின் கீழ் 1,000க்கும் மேற்பட்ட கணக்குகள் கையாளப்பட்டு வருகின்றன. சிறப்பாகச் செயல்பட்டு வரும் இந்த அஞ்சலகத்தை மூடிவிட்டு, 3 கி.மீ தொலைவில் உள்ள தலைமை அஞ்சலகத்துடன் இணைக்க அஞ்சல் துறை முடிவெடுத்துள்ளது.

பொதுமக்களின் சிரமங்கள்:

இது குறித்து மானாமதுரை பாரதிய ஜனதா கட்சியின் நகரப் பொதுச் செயலாளர் முத்துகுமார் விடுத்துள்ள கோரிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

* தூரம் மற்றும் அலைச்சல்: அஞ்சலகம் மாற்றப்பட்டால், பொதுமக்கள் ஒவ்வொரு முறை அஞ்சல் சேவைக்கும் 3 கி.மீ பயணம் செய்ய வேண்டிய சூழல் ஏற்படும். இதற்காகப் பேருந்து அல்லது ஆட்டோக்களைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

* முதியோர் பாதிப்பு: இப்பகுதியில் முதியவர்கள் அதிகளவில் வசிப்பதால், நீண்ட தூரம் பயணம் செய்து தலைமை அஞ்சலகத்திற்குச் சென்று வருவது அவர்களுக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்தும்.

கோரிக்கை:

ரயில்வே காலனி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்தத் தற்காலிக இடமாற்ற உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும் என்றும், துணை அஞ்சலகம் அதே இடத்திலேயே தொடர்ந்து செயல்பட மதுரை மண்டல அஞ்சல் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பாக போதைபொருள் மற்றும் கள்ளசாராயம் ஒழிப்பு குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## சிங்கம்புணரியில் போலி மருத்துவர் கைது: யூடியூப் பிரபலம் சிக்கியது எப்படி?



சிவகங்கை, ஜன.21-

சிங்கம்புணரியில் யூடியூப் மூலம் பிரபலமாகி, உரிய மருத்துவப் படிப்பின்றி சிகிச்சை அளித்து வந்த போலி மருத்துவரை போலீஸார் நேற்று கைது செய்தனர். அவரது மருத்துவமனைக்கு அதிகாரிகள் 'சீல்' வைத்தனர்.

பின்னணி:

சிவகங்கை மாவட்டம், நெற்குப்பை அருகே உள்ள ஆத்திகாடு பகுதியைச் சேர்ந்தவர் நெடுஞ்செழியன் (45). இவர் சிங்கம்புணரியில் 'புத்தூர் கட்டு பாண்டி' என்ற பெயரில் மருத்துவமனை நடத்தி வந்தார். எலும்பு முறிவு, முடக்கு வாதம் மற்றும் நரம்பு தளர்ச்சி போன்ற பாதிப்புகளுக்குத் தான் சிகிச்சை அளிப்பதாக சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்திருந்தார்.

குவிந்த நோயாளிகள்:

சமூக வலைதளங்கள் மற்றும் யூடியூப் மூலம் இவர் பிரபலமடைந்ததால், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தினமும் 200 முதல் 500க்கும் மேற்பட்ட நோயாளிகள் இவரிடம் சிகிச்சை பெற குவிந்தனர். அதிகாலையிலேயே நீண்ட வரிசையில் காத்திருந்து மக்கள் சிகிச்சை பெற்று வந்துள்ளனர்.

அதிரடி சோதனை:

நெடுஞ்செழியன் தவறான சிகிச்சை அளிப்பதாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடிக்கு புகார்கள் வந்ததும் அதன் அடிப்படையில், தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ்வெங்கட் வட்ஸ் தலைமையில் அதிகாரிகள் நேற்று மாலை திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

சோதனையில் பங்கேற்ற அதிகாரிகள்:

* மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குநர் அருள்தாசன்

* மாவட்ட சுகாதார அலுவலர் மீனாட்சி

* மாவட்ட சித்தா மருத்துவ அலுவலர் கவுரி

* டிஎஸ்பி செல்வக்குமார் மற்றும் வட்டாட்சியர் நாகநாதன்

வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள்:

அதிகாரிகளின் விசாரணையில் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகின:

* நெடுஞ்செழியன் பிளஸ் 2 வரை மட்டுமே படித்துள்ளார்.

* திண்டுக்கல்லில் அங்கீகாரம் இல்லாத நிறுவனம் ஒன்றில் பாரா மெடிக்கல் (உதவி செவிலியர்) படிப்பு படித்துள்ளார்.

* திண்டுக்கல்லைச் சேர்ந்த ஒரு பிரபல மருத்துவருடைய சான்றிதழைப் போலியாகப் பயன்படுத்தி மருத்துவமனை நடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

நடவடிக்கை:

இதனைத் தொடர்ந்து, மருத்துவ நலப் பணிகள் இணை இயக்குநர் அளித்த புகாரின் பேரில் சிங்கம்புணரி போலீஸார் நெடுஞ்செழியனை கைது செய்தனர். அதிகாரிகள் மருத்துவமனைக்கு 'சீல்' வைத்ததோடு, அங்கிருந்த பெருமளவிலான மருத்துவத் தைலங்களைப் பறிமுதல் செய்தனர்.

அங்கு சிகிச்சைக்காகக் காத்திருந்த நோயாளிகளிடம் முறையான மருத்துவர்களிடம் மட்டுமே சிகிச்சை பெற வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தி அதிகாரிகள் அவர்களை அனுப்பி வைத்தனர்.





## திருப்பூர் மாநகராட்சி 2026 பொங்கல் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது

திருப்பூர், ஜன.21-

திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 3 பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. தலைவர் கோவிந்தசாமி மற்றும் துணை ஆணையாளர் பார்த்தசாரதி. இவர்களது தலைமையில். பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. வருவாய்த்துறை ஆய்வாளர் ஜெப ராணி மற்றும் துரைசாமி. குழாய் அலுவலர் மூர்த்தி வரி வசூல் அதிகாரிகள், ராஜு, கருப்புசாமி, ஜெயபால், சந்திரன், மற்றும் மண்டல ஊழியர்கள் எல்லோரும் சேர்ந்து. சுகாதாரப் பணியாளர்களை பாராட்டி அவர்களுக்கு பரிசு பொருட்களை வழங்கி. மகிழ்ச்சி பொங்கும், பொங்கல் விழாவினை சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர்.



## சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில், மதகுபட்டி, அரசனூர் ஆகிய துணை மின் நிலையங்களில் நாளை மின்தடை

சிவகங்கை, ஜன.21-

காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை *காளையார்கோவில், நாட்டரசன்கோட்டை, புலியடிதம்பம், பள்ளித்தம்மம், சருகணி, பொன்னலிக்கோட்டை, கொல்லங்குடடி,கள்ளத்தி, கருங்காலி,கருமந்தக்குடி, சாத்தரசன்கோட்டை, பெரியகண்ணனூர், ஒய்யவந்தான்..

*மதகுபட்டி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் மதகுபட்டி,வீரப்பட்டி, கீழப்பூங்குடி, பிரவலூர், பேரணிபட்டி, ஒக்கூர், காடனேரி, அம்மன்பட்டி, நகரம்பட்டி, காளையார்மங்கலம்,கருங்காப்பட்டி, கருங்காலக்குடி, அண்ணாநகர்,பர்மாகாலனி, நாலுகோட்டை, அரளிக்கோட்டை, ஜமீன்தார்பட்டி, ஆவத்தரான்பட்டி, கணேசபுரம், ஏரியூர் சிவகங்கை அருகிலுள்ள அரசனூர் துணை மின்நிலையத்தில் மின் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதையொட்டி அரசனூர், திருமாஞ்சோலை, இலுப்பக்குடி, பெத்தனேந்தல், ஏனாதி, படமாத்தூர், பச்சேரி, வேம்பத்தூர், பில்லூர், களத்தூர்..

ஆகிய துணை மின் நிலையத்தின் செயற்பொறியாளர்கள் அறிவித்துள்ளனர்.



## இளையான்குடி சூராணம்: சமத்துவப் பொங்கல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்: ஒசெ வே. தமிழ்மாறன் தலைமை, எம்எல்ஏ தமிழரசி பங்கேற்பு

இளையான்குடி, ஜன.21-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் சூராணம் கிராமத்தில் சமத்துவப் பொங்கல் வைத்து பெண்களுக்கான போட்டி, கோலப்போட்டிகள், சிலம்பாட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இளையான்குடி கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் வே. தமிழமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் மேனாள் அமைச்சருமான ஆ. தமிழரசி ரவிக்குமார் கலந்து கொண்டு போட்டிகளை தொடங்கி வைத்து , வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார்.

இதனிடையே நிகழ்ச்சியில் , கழக இளம் பேச்சாளர் சூராணம் ஞா. சந்தியா கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் பெண்களுக்கு எவர்சில்வர் பாத்திரங்கள் நலத்திட்ட உதவிகளாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், ஒன்றிய பொருளாளர் ஆரோக்கியதாஸ், மாவட்ட பிரதிநிதி ம. கண்ணன், ஒன்றிய கவுன்சிலர்களான ஜாண்போஸ்கோ செழியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சூராணம் சிவா, ஒன்றிய மகளிரணி இந்திரா, சு. ராசு , சந்தனராசு, பாலுச்சாமி, தைன்ராசு, ஜோஸப் , அமுதா , பிலோமினாள் , மணிவேல், மெண்டோண்ஸா, ஆல்பர்ட், ஜஸ்டின், உச்சாணி ரவி , அன்பழகன் உள்ளிட்ட ஒன்றிய, கிளைக் கழக திமுகவினர் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை இளையான்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் வே. தமிழ்மாறன் சிறப்பாக செய்திருந்தார்...

### சிவகங்கை மாவட்டம்வேலைநாடும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில்,

## வருகின்ற 23.1.2026 அன்று, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல்



சிவகங்கை, ஜன.21-

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் இரண்டாம் அல்லது மூன்றாம் வெள்ளிக்கிழமையன்று சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது.

அதன்படி, வருகின்ற 23.1.2026 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30 மணியளவில் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலக வளாகத்தில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில், வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்கள் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

மேலும், இம்முகாமில் இலவச திறன் பயிற்சிக்கான விண்ணப்பபடிவம், போட்டித் தேர்வுகளுக்கான இலவசப்பயிற்சி வகுப்பில் மாணவர் சேர்க்கை, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்ப படிவம் ஆகியவையும் வழங்கப்படும்.

எனவே, விருப்பமுள்ளவர்கள் பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்த இளைஞர்கள் தங்களது கல்விச்சான்று, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு அடையாள அட்டை, ஆதார் அட்டையுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமில் பணிவாய்ப்பு பெறுவோருக்கு பதிவுமூப்பு ஏதும் ரத்து செய்யப்படமாட்டது. எனவே வேலைநாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161